உ

கடவுள் துணை.

# சிவவாக்கியம்.

இஃது.

களத்தூர்

வேதகிரிமுதலியார்-குமாரர்

**ஆறுமுகமுதலியாரால்**

பார்வையிடப்பட்டு

*

புங்கத்தூர்.

**ம-சபாபதிமுதலியாரது**

கல்விவிளக்கஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

உருத்திரோற்காரி௵ புரட்டாசி௴

சிவமயம்.

# சிவவாக்கியம்

அகாரகாரணத்துளே யநேகநேசரூபமாய்-
உகாரகாரணத்துளே யுருத்தரித்து நின்றனன்-
மகாரகாரணத்துளே மயங்கிநின்ற வையகஞ்-
சிகாரகாரணத்துளே தெளிந்ததேசிவாயமே ()

அரியதோர் நமசிவாய மாதியந்த மானது
ம்-ஆறிரண்டுநூறுகோடி யளவிடாத மந்திரம்
தெரியநாலுவேதமாறு சாஸ்திரம் புராணமுந்-
தேடிமாலுமயனுஞ்சர்வ தேவதேவதேவனே()

நமசிவாய மைந்தெழுத்து நிற்குநன்னிலைக
ளும் - நமசிவாயமைந்திலோடு கூடுமெவ்வெழு
த்தையும் - நமசிவாய மைந்து பூதநாத மான
வாறையும்- நமசிவாய வுண்மையைநமக்குரை
செய்நாதனே...............................(௫)

நவ்விரண்டுகாலதாய் நவின்றமவ்வு வயிறதா
ய்ச் - சிவ்விரண்டு தோளதாய்ச் சிறந்த வவ்வு
வாயதா - யவ்விரண்டு கண்ணதா யமர்ந்திரு
ந்தகாரணஞ்-செவ்வியொத்து நின்றதேசிவாய
மைந்தெழுத்துமே......... ... .........(௪)

சிவாயமைந் தெழுத்திலே தெளிந்துமுத்தி
சேரலாம் - சிவாயமைந்தெழுத்திலே தெளிந்
துவானமாளலாம் - சிவாய மைந்தெழுத்திலே
தெளிந்துஞானஞ்சேரலாம் - சிவாயமைந்தெ
ழுத்தையுந்தெளிந்துபாருமுப்முளே ...(௫)

பாமுனக்கெனக்குவேறு பயமுமில்லை பா
ணையா - சாமுனக்குநித்தமுங் குவித்திடக்கட
மையே- சிரமுருக்கி யமுதளித்த சீருலாவு நா
தனே - யுரமெனக்குநீயளித்த வுண்மையுண்
மையுண்மையே.......................(௬)

அஞ்சுமூன்று மெட்டதா யநாதியானமந்தி
ரம் - நெஞ்சிலே நினைந்து கொண்டு நூறுருச்
செபிப்பிராற் - பஞ்சமானபாதகங்க ளூறு
கோடிசெய்பினும் - பஞ்சுபோற் பறக்குமெ
ன்றுநான்மறைகள்பன்னுமே...... ... ...(௭)

சிவாயமென்றவட்சரஞ் சிவனிருக்குமட்சர
ம்-முபாயமென்றுநம்புவோருக் குண்மையா
னவட்சரங்-கபாடமிட்ட வாசலைக் கடந்துபோ
கும்வாயுவை - யுபாயமிட்டழைக்குமேசிவாய
மைந்தெழுத்துமே......... ..... ......(௮)

நல்லமஞ்சனங்கள் தேடிநாடி யோடிமாய்கி
றீர்-நல்லமஞ்சனங்களுண்டுநாட்டமாக வும்மு
ளே-யெல்லை கண்டெடுத்துநீ விரோசபூசைசெ
ய்விரேற்-றில்லைமேவுசிவனுஞ் சிவன்பதத்திலா
குமே........................ ............(௯)

அறிவிலேபிறந்திருந்து மாகமங்களோது
வீர் - நெறியிலேநீரிருக்குநேர்மை யென்ன
நேர்மைகா - ணறிவிலேதயிரிருக்க வூர்புகு
ந்துவெண்ணெய்க்கடு - மறிவிலாதமாந்தரோ
டுணுகிவாழ்வதெங்ஙனே....... ... ;.....(௰)

இருக்குநாலுவேதமுமெழுத்தறவேயோ
தினும்-பெருக்கநீறுபூசினும் பிதற்றினும்பி
ரானிரா - னுருக்கிநெஞ்சை யுட்கலந்தவுண்
மைகூடவல்லிரேற் - சுருக்கமற்றசோதியைத்
தொடர்ந்துகூடலாகுமே........ ... ... ௰௧)

மூலவட்டமீதிலே முளைத்தவஞ்செழுத்தி
லே - கோலவட்டமூன்றுமாய்க் குளிர்ந்தலர்
ந்துநின்றதீ - ஞாலவட்டமன்றுளே நவின்ற
ஞானிமேலதா - மேலவட்டமாகியேயிருந்த
ம்தசிவாயமே............... ............(௰௨)

அம்பலத்தையம்புகொண்ட சங்கென்றுலச
ங்குமோ - கம்பமற்றபாற்கடல் கலங்கென்று
ற்கலங்குமோ - வின்பமற்ற யோகியையிருளு
வந்தணுகுமோ - செம்பொ னம்பலத்திலே
தெளிந்ததேசிவாயமே.................(௰௩)

காணமுற்ற காட்டகத்தில்வெந்தெழுந்தநீறு
போல்-ஞான முற்றநெஞ்சகத்தி னல்லதொன்
றுமில்லையே - ஊனமற்ற சோதியோ டுணர்வு
கொண்டடங்கினுற் - றேனகத்தி னூறல் போற்
றெளிந்ததேசிவாயமே......... .........(௰௪)

மனத்தகத்தழுக்கறாத மௌன யோகஞானி
கள் - வனத்தகத்திருக்கினு மனத்தகத்தழுக்
கறார் - மனத்தகத்தழுக்கறுத்த மௌனயோக
ஞானிகள்- முலைத்தடத்திருக்கினும் பிறப்பறு
த்திருப்பரே...... .......... ........(௰௫)

பேசுவானுமீசனே பிரமஞானமும்முளே-
யாசையானவைவரும் மலைந்தலச்சல் படுகி
று-ராசையானவைவரையடக்கியோரிடத்திலே-
ப்பேசிடாதிருப்பிராகிலீசன்வந்துபேசுமே(௰௬

சாமநாலுவேதமுஞ் சகல சாஸ்திரங்களுஞ்-
சேமநூலையோதினுஞ் சிவனை நீரறிந்திலீர்...*
காமநோயைவிட்டுநீர்கருத்தொடுங்கவல்லிரே*
ஊனமற்றகாயமாயிருப்பனெங்களீசனே ...*

வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொரு
வர்நத்தினல்- விடுவரோன்பரா ருயிரைவெட்ட
வேண்டுமென்பரே-நடுவன்வந்தழைத்தபோது
நாறுமிந்தநல்லுடல் - சுடலை மட்டுங் கொண்டு
போய்த்தோட்டிகைக்கொடுப்பரே......(௰௮)

இரண்டதொன் றுமூலமாயியங்குசக்கரத்து
ளே-சுருண்டுமூலவளையமாய்ச் சுணங்குபோற்

இடந்ததி - முரண்டெழுந்தசங்கினோசை மூல
நாடிவூடுபோ- யரங்கபட்டணத்துளே யமர்ந்த
தேசிவாயமே..........................(௰௯)

வித்தில்லாதசம்பிரதாயமேலுமில்லை கீழுமி
ல்லை - தச்சில்லாதமாளிகை சமைந்தவாறதெங்
ஙனே-பெற்றதாயவிற்றடிமை கொள்ளுகின்ற
பேதைகாள்-சித்தில்லாதபோதுதான்சிவனில்லை
யில்லையே........ ............... ......(௨௰)

ஆடுகாட்டிவேங்கையையகப்படுத்தும் வாறு
போன்-மாடுகாட்டியென்னை நீ மதிமயக்கலாகு
மோ - கோடுகோட்டுமானையைக்கொன் றுரித்த
கொற்றவா-வீடுகாட்டியென்னை நீவெளிப்படுத்
தல்வேண்டுமே..........................(௨௧)

உருத்தரித்த நாடிதன்னிலோடுகின்ற வாயு
வைக் - கருத்தினாலிருத்தியே கபாலமேற்றவல்
லிரேல் - விருத்தர்களும்பால ராவர்மேனியுஞ்
சிவந்திடும்- அருட்டரித்தநாத னாணையம்மையா
ணையுண்மையே.................. ... ...(௨௨)

என்னகத்திலென்னை நானெங்குமோடி நாடி
னேன் - என்னகத்திலென்னையன்றியேதுமொ
ன் றுகண்டிலேன் - மின்னெழும்பிவிண்ணகத்
தின்மின்னொடுங்கும்வாறுபோ - லென்னகத்து
ளீசனோடியானுமல்லதில்லையே... ......(௨௩)

நாலுவேதமோதுகின்ற ஞானமொன் றறிவி
ரோ-நாலுசாமமாகியே நவின்றஞான போத

மாய் - ஞால் மூண்டகண்டனு மயனுமந்த
மாலுமாய்ச்- சாலவுன்னிநெஞ்சுளேதரித்ததே
சிவாயமே......................... ..... (உச)

மூச்சதுர மூலமாகி மூன்றதானபேதமா*
யச்சதுரமும்முளேயடங்கவாசியோகமாய்...*
மெய்ச்சதுரமெய்யுளேவிளங்கிஞான தீபமா*
யுச்சரித்தமந்திரம் ஓம்நமசிவாயமே......(உரு)

மூலமண்டலத்துளே முச்சதுர மாதியாய்*
நாலுவாசலெண்விரலினடுவுதித்தமந்திரம்...*
கோலியொன்றுமைந்துமாய்க்குளிர்ந்தலர்ந்து
நின்றதீ-மேலும்வேறுநாடிலேன் விளைந்ததே
சிவாயமே ... ... ... (உசா)

மூன்றுமண்டலத்துளே; முட்டிநின்றதூணி
லே-நான்றபாம்பின்வாயிலேநடுவுநின்றதீபமா-
யீன்றதாயுமப்பனுமெடுத்துரைத்தமந்திரந் *
தோன்றுமோரெழுத்திலேசொல்லவெங்குமில்
லையே ... ... ... ...(உஎ)

ஐம்பதொன்றிலக்கர மடங்கவோ ரெழுத்
துளே - விண்பறந்தமந்திரமும் வேதநான்கு
மொன்றலோ-வொண்பறந்த மூலவைந் தெழு
த்துளேமுளைத்ததீ- யங்கலிங்கபீடமாயமர்ந்த
தேசிவாயமே ... ... ...(உஅ)

வஞ்சகப்பிறப்பினை மனத்துளேதரித்துநீ*
ரஞ்செழுத்துநுண்மையையறிகிலாதமாந்தரே
வஞ்சகப்பிறப்பினைவதைத்திடவும்வல்லிரோ...*

லஞ்செழுத்துநுண்மையை யறிந்து கொள்ள
லாகுமே ... ... ... (௨௯)

இடங்கள்பண்ணி சுத்திசெய்தே யிட்டபீட
மீதிலே - யடங்கநீரும் பூசைசெய் தருந்தவங்
கள்பண்ணுவீர். - ஒடுங்குகின்ற நாதனுருதிக்
குஞான மெவ்விட - மடங்குகின்ற தெவ்விட
மறிந்துபூசைசெய்யுமே... ... (௩௰)

அட்சரமநாதியோ ஆத்துமமநாதியோ - பு
க்கிருந்தபூதமும் புலன்களுமநாதியோ- தத்து
வம்நாதியோ சதாசிவ மநாதியோ - தக்கமிக்க
நூல்களுஞ் சாத்திரமநாதியோ - மிக்கிருந்த
ஞானிகாள் விரித்துரைத்தல்வேண்டுமே...(௩௧)

அக்கரமநாதியல்ல ஆத்துமமநாதியல்ல - பு
க்கிருந்த பூதமும்புலன்களுமநாதியல்ல - தக்க
மிக்கநூல்களுஞ் சாத்திரமநாதியல்ல - வொக்க
நின்றுடற்கலந்தவுண்மைகாணநாதியே... (௩௨

பத்தகங்களைச்சுமந்து பொய்களைப்பிதற்று
வீர் - செத்திடம் பிறந்திடம தெங்ஙனென்ற
றிகிலீர் - அத்தனை யசித்தனை யறிந்து நோக்க
வல்லிரோ - வுத்தமத் துளாயசோதி யுணரும்
யோகமாகுமே ... ... (௩௩)

நாலுவேதமோதுவீர் ஞானமொன்று சொ
ல்லுவீ - பாலினுள் நெய்கலந்த பான்மை
யை யறிவிரோ - வாலருண்ட கண்டனுமகத்
துளே யிருக்கையிற் - காலனென்று சொல்லு

வீர் சுறுவி னுமக்கில்லையே ... ... (௫௪)
சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரலோ-
பேரதுவாச மென்றலோ பூதமைந்து மொன்
றலோ - ஓதும் வேதசேமு மூணுறக்கமொன்
றலோ - சாதியாவ தென்ப தேது சாவுவாழ்வு
றின்னையே ... ... ... (௫௫)
அருளிலேபிறந் திதித்துமான ரூபமாகியே-
யிருளிலேதயக்குகின்ற வேழைமார்தர் கேளி
யினே - பொருளிலே தவம்புனைந்து பொரு
ந்திநோக்க வல்லிரோன் - மருளமேதது வன்னியி
ன்மறைந்ததேசிவாயமே ... (௫௬)
சுருக்கலந்தகாலமேகண்டிருந்தகாரணா-வுரு
க்கலந்தபோதலோ வுன்னையானறிந்ததல்-திரு
க்கலந்தசோதியைத் தெளிந்துயானறிந்தபின்-
னிருக்கிலேனிறக்கிலேனிரண்டுமற்றிருந்ததே ()
மௌனமானவைந்தெழுத்தைவாசியேறிமெ
ல்லவே - வாசெனலா நிறைந்தசோதி மண்டல
ம் புகுந்தபின் - அவனுநானுமெய்கலந்தே ய
னுபவிக்கு மளவிலே - யவனுமுண்டுநானு மி
ல்லை யாருமில்லை யானதே ... ... (௫௮)
கைவிடங்கள்கொண்டுநீர் கண்சிமிட்டிநிற்
கிறீர் - செவ்விடங்கள் கொண்டுநீ ரொன்றுமே
செயிக்கிறீர் - பொய்யடங்க கண்டலைப் பொ
ருந்திநோக்கவல்லிரோன் - மையமர்ந்தகண்ட
னோடு மருவிவாழலாகுமே ... (௫௯)

பருத்திநூன் முருக்கியிட்டுப் பஞ்சைபோ
லவஞ்சர்காள் - பருத்திநூன் முறுக்கியிட்டுத்
தூண்டியேற வல்லிரேற் - கருத்திலேலை யுங்க
ளூன்று காலலேலையும்மகன் - றொருத்திநூல்க
லைப்படும்பி தன்மையுண்மை யுண்மையே (௪௧)

தன்மசிந்தை யாமளவுந் தவமறியாத் தன்
மையாய்க் - கன்மசிந்தைவெயிலுமூன்று கருத்
தமிழ்ந்தகசடரோ - ஜென்மஜென்மந் தேடியு
ந்தெளியொணாத செல்வனை - நன்மையாகவும்
முளேநயந்துகாணவேண்டுமே... ... ...(௪௨)

வானிலாததொன்றுமில்லை வானுமில்லை யெ
ன்றிடில் - ஊனிலாத தொன்றுமில்லை யூனு
மில்லையுன்னிடில் - நானிலாத தொன்றுமில்லை
நானுமில்லைநண்ணிடில் - தானிலாததொன்று
மில்லைத்தயங்கியாடுகின்றதே ... ... (௪௩)

கள்ளவுள்ள மேயிருக்க கடந்தஞான மோது
வீர் - கள்ள முள்ளறுத்தபோது கதியிதன்
றிக்காண்கிலீர் - உள்ளமே விளக்கிநித்த மொ
ளியனுக வல்லிரேற் - றெள்ளுஞான முமமு
ளே சிறந்ததேசிவாயமே ... ... (௪௪)

காணவேண்டு மென்றுநீர் கடன் மலைகளே
றுவீர் - ஆணவமதல்லவோ வறிவிலாதமாந்
தரே - வேணுமென்றவ்வீசர்பாத மெய்யுளே
தரிப்பிரேற் - றுணு வாக நின்றசீவன் றன்சிவ
மதாகுமே ... ... ... (௪௫)

அணுவினோ டகண்டமா யளவிடாதசோதி
யைக் - குணமதாக வும்முளே குறித்துநோக்
கின்மூர்த்தியாம்- மிணமிலெனன்று விரலையெண்
ணி மீனொணு மயக்கமாய்த் - துணிவிலாத ப
டியினுத் தொடர்ந்துபூசைசெய்குவீர் (௪௫)

எச்சிலெச்சி லென்றுநீ ரிடத்திருக்கு மே
ழைகாள் - இச்சிலெச்சி லல்லவோ தூயகாய
மானதும்-வைத்தவெச்சி றேனலோவண்டியெ
ச்சில்பூவலோ - கைச்சுதாவில் வைத்துடன்கற
ந்தபாலுமெச்சிலே ... ... (௪௬)

தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடியோடுந்தீ
ர்த்தரோ - தீர்த்தலிங்கமுள்ளினின்ற சிவனைத்தெ
ளியுமோ - தீர்த்தலிங்க மும்முளே தெளிந்து
காண வல்லிரேற் - றீர்த்தலிங்கந் தானதாய்ச்
சிறந்ததேசிவாயமே ... ... (௪௭)

ஆடுகொண்டு கூடுசெய்தமர்ந்திருக்கும் வா
றுபோற் - றேடுகின்ற செம்பினைத் திடப்ப
டப்பரப்பியே - நாடுகின்ற தப்பிரானு நம்
முளே யிருக்கவே - போடுபத்திர பூசையெ
ன்னபூசையென்னபூசையே ... ...(௪௮)

அன்னைகற்ப கோளைக்கு ளக்கினிப் பிர
காசமா - யவ்வனாக்குள் வெத்திடா வற்பவிற்
துருபமாய்த் - தன்னையொக்கு மென்ற போ
து தடையறுத்து வெளிய தாய்த் - தகுதிநல்
லபெருமைதந்து தில்லவனுவளர்த்ததீ... (௪௯)

என்னையற்ப்பநேரமு மறக்கிலாதநாதனே-யே
கனேயிறைவனே யிராசராசராசனே - யுன்னை
யற்பநேரமுமொழிந்திருக்க லாகுமோ - வுன
துநாட்டமெனதுநாவி லுதவிசெய்வையீசனே

எல்லைபற்று நின்றசோதி யேகமா வெறிக்
கவே - யெந்தைபூரணப் பிரகாச ரேகபோக
மாகியே - நல்லவின்பமௌன சாகரத்திலேயழு
த்தியே - நாடொணாத வுயிர்தமூண்டு நானழி
ந்துநின்றநாள் ... ... ...(௫௧)

அல்லிறந்து பகலிறந்த திசமு மிறந்துபோ-
யண்டாண்டமுங்கடந்த நேகநேகரூபமாய்ச்-
சொல்லிறந்து பொருளிறந்த சுகசொரூபவெ
ளியிலே - சொல்லியாரவெண்ணில்வேறுதுணை
களானவில்லையே ... ... (௫௨)

ஆனவாறதாயிடு மகண்டமான சோதியை-
நூனநாட்டியும்முளே யுகந்து காண வல்லிரே
ஞானகாய மாளலா மூலகபார மாளலாம்-வான
நாடுமாளலாம் வண்ணநாடராணையே ...(௫௩)

இட்டகுண்டமே*தடா வெரிவளர்ப்ப தே
தடா - சுட்டமண்கலத்திலேசுற்று நூல்களே
தடா - முட்டி நின்றதூணிலே முளைத்தெ
ழுந்தசோதியைப்- பற்றிநின்ற தேதடா பட்
டநாதபட்டரே ... ... (௫௪)

* ஏடா - தோழன் முன்னிலைப்பெயர்

நித்தலுமணிதுலக்கி நீடுமூலைபுக் கிருந்து
சத்தியேசதறியே கண்கண் மூடியென் பயன்-
எத்தனை பேரெண்ணிறு மெட்டிரண்டு பத்
தலோ - வத்தனுக்கி தேற்குமோ வறிவிலாத
மாந்தரே ... ... ... (௫௫)

பாங்கினோடு பத்மவாசனத்திருந்து பார்த்
தனன் - ஒங்கிநாடி மேலிருந்தே யுச்சரிக்கு
மந்திரம் - மூங்கில்வெட்டி நாருரித்து மூச்
சைபொட்டியுண்டுநா - ணைய்ந்தநூலிதொன்று
மெயதிற் துலைர்ந் துவொண்டியே ......(௫௬)

அருக்கனோடு சோமனு மதற்குமப் புறத்
திலும் - நெருக்கியேறு தாரகை நெருங்கு
மோரகத்திலே - பரப்பிலாதவெளியிலே பா
தலைதநாடியூடுபோ - யிருக்கவல்லவர்க்கலோவி
னிப்பிறப்பதில்லையே ... ... (௫௭)

ஆவதும் பரத்துளே யழிவதும்பாத்துளே-
போவதும் பாத்துளே புகுவதும்பாத்துளே-
தேவரும்பாத்துளே திசைகளும் பாத்துளே-
யாவரும்பரத்துளே யியானுமப்பாத்துளே

எட்டிரண்டு கூடியேக லிங்கமான தேவனை-
மட்டதாகவும்முளே மதித்துநோக்க வல்லிரே
ர் - கட்டமானபிறவியின் * கருக்கடல் கடக்க
லா - மிட்டமானவெளியினோடிலைசந்திருட்பீர்
காண்மியே ... ... ... (௫௮)

* கருக்கடல்-வலித்தல்விகாரம்;

உண்மையான மந்திர மொளியிலே யிரு
ந்திடுந் - தண்மையான மந்திரஞ் சமைந்த
ரூபமாகியே - வெண்மையான மந்திரம் விளை
ந்துநீறதானதே - புண்மையான மந்திரமதொ
ன்றுமேசிவாயமே ... ... (௩௰)

பன்னிரண்டு நானிருக்கிப் பஞ்ச வன்ன
மொத்திட - மின்னியவ்வெளிக்குணின்று வே
ரொடுத்தமர்ந்தது - சென்னியான தலத்திலே
சீவனின் றியங்கிடும் - பன்னியுன்னி யாய்ந்த
வப்பராப்பிரமமாவரோ ... ... (௩௧)

தச்சிவாயி லுச்சிமேலாயிரந் தலங்களாய்-மு
ச்சுடரு மூவிரண்டு மூன்றெழுந்த தீச்சுடர்-
வச்சிரமதாகியேவளர்ந்துநின்றதெவ்விடம்-இச்
சுடருமிந்திரியமுமேகமானதெங்ஙனே (௩௨)

எளிதிலங்குகாணலாகு மெய்பிரானிருப்பி
டம் - அழிவிலாது நின்றதே அகாரமும் உகா
ரமுங் - குளிகையானசோதியுங் குலாவி நின்ற
தவ்விடம் - வெளியதாகு மொன்றிலே விளைந்
ததேசிவாயமே ... ... (௩௩)

ஆதியந்தமூலவிந்து நாதமைந் தெழுந்து
மாய் - ஆதியந்தமூலவிந்து நாதமைந்து பூ
தமாய் - ஆதியந்தமூலவிந்து நாதமேவிநின்ற
தே - ஆதியந்த மூலவிந்து நாதமே சிவா
யமே ... ... ... (௩௪)

மூன்றிரண்டு மைந்துமாய் முயன் றெழு
ந்ததேவராய் - மூன்றிரண்டு மைந்ததாய் மு
யன்றதே புலமெலா - மீன்றதாயு மப்பனுமி
யங்குகின்றநாதமுந் - தோன்றுமோ ரெழுத்தி
னோடுசொல்லவேறுமில்லையே ... (௬௫)

அக்கரந்தவக்கரத்தி னுட்கரந்தவக்கரஞ்-சக்
கரந்துசவ்வையுண்டுசம்புளத்திருத்ததி - வெட்
கறந்த வெண்ணெய் போல வெவ்வெழுத்து
மெம்பிரா - னுட்கலந்துநின்ற நேர்மையாவ
ர்காணவல்லிரோ ... ... (௬௬)

நெட்டெழுத்தின்வட்டமே நிறைந்த பல்லி
யோனியும் - நெட்டெழுத்தின்வட்ட மொன்றி
னின்றதென் றுங்கண்டிலே - நெட்டிடழுத்திர
ண்டுமே யிலங்கமாகுமாதலால் - நெட்டெழு
த்தில் வட்டமன்றிநேர்படாததிசனே ... (௬௭)

அரியுமாகியயனுமாகியண்ட மெண்டிசை
யுமாய்ப் - பெரியனாகி யுலகினிற் பெயர்ந்த
பாதமொன்றலோ - வுருவுகண்டுவேறுசெய்து
வேடமிட்ட மூடமோ - யுருவின் மூன்றுதேவர்க
ளுமொன்றதாகுமும்மூளே ... (௬௮)

முத்திசித்தி தொந்தமாய் முயங்குகின்றமூ
ர்த்தியை - மற்றுதித்த வைம்புலன்க ளாகுமதி
திமப்புலன் - அத்தர்நித்தர் காளகண்ட ரன்பி
னாலனுதினம் - மூச்சரித்துளத்திலே யதிர்ந்துணை
ர்ந்துகொண்மினே ... ... (௬௯)

சுக்கிலத் துளியுளே சுரோணிதக் கருவுளே-
முச்சதுரவாசலின் முளைத்தெழுந்த மோட்டி
னின் - மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞா
னதீபமா - யுச்சரித்தமந்திரம தொன்றுமேசி
வாயமே ... ... ... (எ0)

வேணுமென்று ஞானமும் விரும்புகின்ற
நூலிலே - தாணுவுண்டங்கென்கிறீர் தரிக்கிறீ
ர்மறக்கிறீர் - தாணுவென்று மூலநாடி தன்
னுளாடியும்முளே காணுமன்றி வேறியாவுங்
கண்மயக்கமொக்குமே ... ...(எக)

வழக்கிலே யுரைக்கிறீர் மனத்துளேதவிக்கி
றீ - ருழக்கிலாது நாழியான வாறுபோலு மூ
மைகாள் - முழக்குநாலு நாழியான வாறுபோ
லுமும்முளே - வழக்கிலேயுரைக்கிலீர் மனத்
துளீசன்மன்னுமே ... ... (எஉ)

உதித்தெழுந்த தெவ்விட மொடுங்குகின்ற
தெவ்விடம் - மதித்தஞான மெவ்விட மடங்கு
கின்றதெவ்விடங் - கதித்தசீவ னெவ்விடங்க
ண்ணுறக்கமெவ்விடம் - விதிக்கவல்ல ஞானிகா
ள்விரித்துரைக்கவேண்டுமே ... (எங)

அண்ணலாய நாதியாய நாதிமுன் னநாதியா
ய்ப் - பெண்ணுமாணு மொன்றலோ பிறப்ப
தாகுமுன்னலாங் - கண்ணிலாணிசுக்கிலங் கருத்
தொடுங்கிநின்றபின் - மண்ணுளோரும் விண்
ணுளோரும் வந்தவாறதெங்ஙனே ... ...(எச)

நினைப்பதொன்று கண்டிலே னீயலாது வே
றிலை - நினைப்புமாய் மறப்புமாகி நின்றமாயமா
யைகளே - யனைத்துமாய கண்டமாய நாதிமூ
ன்னாதியா - மூனக்குநானெனக்குநீ நினைக்
கும்வாறதெங்ஙனே ... ... (௭௫)

அனுப்பிறந்தகண்ட மாயான்றவன்னி யோ
நியாய் - மனுப்பிறந்து செய்துவைத்த நூலி
னுன்மயங்குவீர் - சனிப்பதேதுசாவதேது தா
வரத்தினுட்பொரு- ணினைப்பதேது நிற்பதே
து நீருணர்ந்துகூறுமே ... (௭௬)

எத்திசைக்கு மெவ்வுயிர்க்கு மெங்களப்ப
னெம்பிரான் - முத்திஞானவித்துளே மூளைத்
தெழுந்தசெஞ்சுடர் - சித்தினுற்றெளிந்தபோ
துந்தவர்கோயிற்சேர்ந்தன - னத்தனுடல்கண்
டபோ தடங்கியாடலுற்றதே ... ..(௭௭)

அங்கலிங்கபீடமும் மசைவை மூன்றெழுத்தி
னுஞ் - சங்குசக்கரத்தினுந்தரித்தவெண்கரத்தி
னும் - டங்குகொண்டசோதியும் பரந்தவாயு
வைந்தினுஞ் - சிங்கநாதவீணையுஞ்சிவாயமல்ல
தில்லையே ... ... ... (௭௮)

நீளவீடுகட்டுவீர் நெடுங்கதவு சாத்துவீர்-
வாழவேணுமென்றலோ மகிழ்ந்திருந்த மாந்த
ரோ- காலனோலைவந்தபோது கைக்கலந்து நின்றி
டும் - ஆலமுண்ட கண்டரானை யம்மையானை
புண்மையே ... ... ... (௭௯)

வீடெடுத்து வேள்விசெய்து மெய்யினோடு
பொய்யுமாய் - மாடுமக்கள் பெண்டிர் சுற்ற
மென்றிருந்த மாந்தர்கா - ளோடுபெற்ற நம்ப
ர்கையி னோலைவந்தழைத்தபோ - தாடுபெற்ற
விலைபதும்பெறாதகாணவ்வுடலமே ... (௮௰)

ஓடமுள்ளபோதெலா மோடியே யுலாவலா
ம் - ஓடமுள்ளபோதெலா முறுதிபண்ணிக்
கொள்ளலாம் - ஓடமு முடைந்தபோ தொப்
பில்லாத வெளியதே - யாருமில்லை கோலுமி
ல்லையாருமில்லையானதே ... (௮௧)

வல்லவாசலொன்பது மருத்தடைந்த வாச
லுஞ் - சொல்லும்வாசலோரைந் துஞ் சொ
ல்லவிம்மி நின்றதும் - நல்லவாச லைத்திறந்து
ஞானவாசலூடுபோ - யெல்லை வாசல் கண்ட
பின்னினிப்பிறப்பதில்லையே ... ...(௮௨)

ஆதியான தொன்றுமே யநேகரூப மாய
மாய்ச் - சாதிபேத மாயெழுந்து சர்வசீவனு
ளபின் - ஆதியோடு கூடிமீண்டெழுந்து சன்ம
மானபின் - சோதியான ஞானியாருஞ் சுத்த
மாயிருப்பரோ ... ... ...(௮௩)

மலர்ந்ததாது மூலமாகி வையகமலர்ந்தது
ம் - மலர்ந்தபூவுதிர்ந்தபோது பயக்கம்வந்த
த்ததும் - புலன்களைந்து பொறிகலங்கிப் பூமி
மேல்விழுந்ததும் - இலங்கலங்கி நின்றமாய மெ
ன்னமாயமீசனே ... ... (௮௪)

வண்டுபூ மணங்களோடு வந்திருந்த தேனெ
லாம் - உண்டுளேயடக்கும்வண்ணமோமிலிங்க
மூலமாய்க் -கண்டுகண்டு வேரிலே கருத்தொடு
ங்கவல்லிரேற் - பண்டுகொண்ட வல்வினைப் ப
றந்திடுஞ்சிவாயமே ... ... (௮௫)

ஓரெழுத்தி லிங்கமாகவோதுமக்கரத்துளே-
போரெழுத் தியங்குகின்ற வுண்மையை யறிகி
லீர் - மூவெழுத்துமூவராய் மூலைத் தெழு
ந்தசோதியை - நாவெழுத்து நாவுளே நவின்
றதேசிவாயமே ... ... (௮௬)

தாரதாரதாரமுந் தொடர்ந்தெழுந்த தார
மும் - பாரபாரபாரமென்று பரிந்திருந்த பா
விகாள் - நேரநேர நேரமு நினைந்திருக்க
வல்லிரேல் - தார தார தாரமுந் தொடர்ந்து
கூடலாகுமே ... ... ... (௮௭)

குண்டலங்கள் பூண்டுநீர் குளங்கடோறு மூ
ழ்கிறீர் - மண்டுகங்கள்போலநீர் மனத்தின்மா
சறுக்கிலீர் - மண்டையேந்துகையரை மனத்
திலேநினைத்தபோது - பண்டைமா லயன்று
தொழப்பணிந்துவாழலாகுமே ... (௮௮)

நாடிநாடிநாதனை நயந்துபாரு முள்ளே-
யோடியோடி மீளுவாரை யும்முளே யடக்கி
லீர் தேடிமேவுகாலனுந் திகைத்துநின்றுபோ
ய்விடுங் - கோடிகோடி காலமுங் குறைவிலா
திருப்பிரே ... ... ... (௮௯)

செய்யநீடிதெங்கிளநீர் சேர்ந்த காரணங்கள் போலையன்வந்தே யென்னுளம் புகுந்துகோயில்கொண்டனன் - மெய்யன்வந்து நெஞ்சில் வாழ்க வேண்டியேயுரைத்தபின் - வையகத்து மாந்தர்முன்னே வாய்திறப்பதில்லையே (கூ0)

புதிபூசையென்றுநீவிர் பூசைசெய்யும் பேதைகாள் - புதிபூசை யென்னிலும் பூசைகொண்டதெவ்விடம் - ஆதிபூசைகொண்டதோ வநாதிபூசைகொண்டதோ - ஏதுபூசை கொண்டதே யின்னதென்றியம்புவீர்.......... ..(கூக)

கூடுகட்டி முட்டையிட்டுக் கொண்டிருந்த வாறுபோ - லாடிரண்டு கன்றையீன்ற வம்பலத்துளாடுதே - மாடுகொண்டு வெண்ணெய் புண்ணு மானிடப்பசுக்களே - வீடுகண்டு கொண்டபின்புவெட்டவெளியுங்காணுமே ... ...(கூஉ)

உடம்புயிரொடுத்ததோ வுயிருடம் பெடுத்ததோ - வுடம்புயிரொடுத்தபோ துருவமேதுசெப்பிடும் - உடம்பிறந்து போய்விடு முயிரிறப்பதில்லையே - யுடம்புமெய் பிறந்ததால முன்மைஞானஞ்சொல்லடா......... ......(கூங)

உள்ளதோபிறப்பதோ வுயிர்ப்படங்கி நின்றிடம் - மெள்ளவந்து கிட்டநீர் வினவவேண்டுமென்கிறீர் - ருள்ளதும் பிறப்பது மொத்தபோது நாதமாங் - கள்ளவாசலைத்திறந்து காணவேண்டுமாந்தரே ... ... (கூச

உயிரிருந்ததெவ்விட முடம்பெடுப்ப தன்
முனே-யுயிரதாவதேதெடாவுடம்பதாவதேதெ
டா - வுயிரையுமுடம்பையுமொன்றுவிப்பதே
தெடா- வுயிரினுடம்பெடுத்தவுண்மைஞான
ஞ்சொல்லெடா ... ... (௧௫)

உயிர்பரத்தி னின்றிடு முடம்பெடுப்ப தன்
முனம் - உயிரகாரமாய்விடு முடம்புகாரமாய்
விடும் - உயிரையுமுடம்பையு மொன்றிவிப்ப
தச்சிவம் - உயிரினுடம்பெடுத்ததொத்த வர
றுகாரண்மினே ... ... ...(௧௬)

இல்லைபக்கடந்துநின்று தெண்டணிட்டவா
யுவி - னெல்லைபைக்கடந்துபோ யிமைப்ப
துமறிவிரோ - இல்லையைக் கடந்துநின்ற செ
டிதலோக வெளியிலே - வெள்ளையுஞ் சிவப்
புமாகிமெய்கலந்துநின்றதே... ........(௧௭)

உருவுமல்லவொளியுமல்ல வொன்றதல்ல நி
ன்றதல்ல - பெரியதல்லசிறியதல்ல பேசலாவ
தொன்றல - மருவுவாசி யுற்றகந்த மத்தநாடி
யுற்றதல்ல - வரியதாகநின்றநேர்மை யாவர்கா
ணவல்லிரே ... ... ... (௧௮)

மந்திரங்கள் கற்கிறீர் மயங்குகின்ற மாந்த
ரே - மந்திரங்கள்கற்றநீர் மரித்தபோது சொல்
விரோ - மந்திரங்க ளும்முளேமதிக்க நீறுமும்
முளே - மந்திரங்களாவதும் மனத்திலேத் தெ
ழுத்துமே ... ... ... (௧௯)

சங்கிரண்டுதாரை யொன்றுசன்ன பின்னலா
னதும் - மங்கிமாண்டுலகெலா மாண்டுலைந்து
போனதுஞ்- சங்கிரண்டையுந்திறந்து தாரையூ
தவல்லிரேற் - கொங்கைமங்கைபாகனோடு கூடி
வாழலாகுமே.................................(௱)

எங்குமுள்ளவீசனு மெம்முடற்புகுந்தபின்-
பங்குகூறுபேசுவார் பாடுசென்றணுகிலா- ரெங்
கடெய்வ முங்கடெய்வ மென்றுபேத முள்ள
தோ - வுங்கள்பேதமன்றியந்த வுண்மைபேத
மில்லையே.................................(௱க)

சிவவாக்கியர்பாடல்

முற்றுப்பெற்றது.